

என்னால் முடியுமா?

சாம் ஜெபத்துரை வெளியீடு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

என்னால் முடியுமா?

Bro.T.Paul Prabhakaran
Madhapura Village
Chamarajanagar-571313
KARNATAKA

சகோதரி. ஜேஸ்மின் பால்ராஜ்

வெளியிடுபவர்:
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதல் பதிப்பு : மார்ச் 1998

தனிப்பிரதி ரூ.10-

வெளியீடு எண் : 719

கிடைக்கும் :

[illegible] ஆர்ட் பிரிண்டர்ஸ்

50, [illegible]

கோடம்பாக்கம், சென்னை - 600 024.

அறிமுக உரை

சகோதரி. ஜேஸ்மின் பால்ராஜ் அவர்கள் எழுதிய என்னால் முடியுமா? என்ற புத்தகத்தை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நிச்சயமாக இந்தப் புத்தகம் உங்களுக்கு ஆசீர்வாதமாக அமையும்.

சகோதரி அவர்கள் பல பத்திரிக்கைகளில் எழுதிய அவர் களது அனுபவ சிறுகதைகளை எல்லாம் வாசித்தேன். அவைகள் எளிய நடையில் உள்ளத்தை தொடும் விதத்தில் அமைந்திருக்கிறதைக் கண்டேன். அவர்களுடைய அனுபவ கதைகளை வெளியிட வேண்டுமென்ற ஆவல் எனக்கு உண்டாயிற்று. அதை புத்தகமாக வெளியிட உரிமை தாருங்கள் என்று கேட்டேன். அவர்கள் மிகவும் அன்புடன் அனுமதி வழங்கினார்கள்.

வரப்போகிற நாளில் அவர்களுடைய ஏராளமான புத்தகங்களை வெளியிட இருக்கிறோம். இதற்காய் ஜெபியுங்கள். இந்தப் புத்தகத்தை வெளியிட அனுமதிக் கொடுத்த சகோதரி அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் அன்பையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கர்த்தர் அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பாராக!

J. சாம் ஜெபத்துரை.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	என்னால் முடியுமா!	5
2.	எழுப்புவீரா?	9
3.	பரிட்சையோ பரிட்சை!	13
4.	வீட்டைக் கட்டிப்பார்!	17
5.	ஆம்...ஆமாவேதான்!	21
6.	புத்திர சுவிகாரம்!	25
7.	நிறமாற்றம்!	29
8.	மரித்தும் பேசுகிறார்!	32
9.	கா...கா...கா!	36
10.	மாற்றுவார் அவர்!	41

① என்னால் முடியுமா?

என்ன! இன்றைக்குப் பௌர்ணமியா? நிலவின் ஒளி இவ்வளவு வெளிச்சமாக இருக்கிறதே. "பால் போல் ஒளி" என்கிறார்களே, அது சரிதான். கலெண்டரைப் பார்ப்போம். ஆமா சரிதான். இன்று பூரண நிலவு. நம்ம இந்த அறையில் தனியாகப் படுத்திருந்தா அப்படியே வெளியே ஜன்னல் வழியாகத் தெரியுமே, கண்ணாடி ஜன்னல் ஆச்சே. ஒபேக்கா இருந்தாலும் பரவாயில்லை-தனியாக எப்படி படுப்பது? என்ன செய்யலாம்? அப்படி ? இல்லை.. இல்லை இப்படி ? யோசித்தேன். அதுதான் சரி ஆஹா... வேறு ஒருவர் படுத்திருக்கிறார் போல் ஒரு உருவம் செய்து வைப்போம். எப்படி செய்றது?

ஒரு கருப்புப் போர்வையை எடுத்து, பந்து போல உருட்டி தலைக்கு வைத்தேன். இரண்டு தலையணைகளை நீட்டத்தில் வைத்தேன். வேறு ஒரு போர்வையால் மூடினேன். சரியாக ஒருவர் அடுத்த கட்டிலில் படுத்திருப்பது போல இருந்தது. அந்த உருவம். ஆஹா! *Very good* என்று என்னை நான் பாராட்டிக் கொண்டேன்!

ஆண்டுகள் முன் நானும் என் கணவரும் அஸ்ஸாமில் கௌகாத்தியில் இருந்தோம். அதுவும் பிரம்மபுத்திரா நதியின் ஓரத்தில். அங்கு நில நடுக்கம் அடிக்கடி ஏற்பட்டு, சில நேரங்களில் பிரம்மபுத்திராவின் சிறு கிளை நதிகளின் திசையே மாறி விடும். ஆபத்துக்களை தவிர்ப்பதற்காக. வீடுகளின் சுவர்கள் தட்டிகளினால் செய்யப்பட்டு, வெள்ளையடிக்கப்பட்டிருக்கும். ஆனால் தற்காலத்தில் அஸ்திபாரம் போடும்போதே மத்தியில் ஒரு பெரிய ஸ்பிரிங்கைப் பதித்து நான்கு மூலைகளிலும் சின்ன ஸ்பிரிங் (தசைவில்) பதித்து, மத்தியுடன் இணைத்து கட்டிடங்கள் ஆடினாலும் இந்த ஸ்பிரிங் விழாமல் ஆடி, சற்று ஆபத்தை தவிர்க்கும். ஜன்னல்கள் மெல்லிய கண்ணாடிகளால் செய்யப்பட்டிருக்கும். ஆபத்திற்கு அது உதவும்.

அன்று என் கணவர் ஜோர்ஹோட் சென்று இருந்தா நான் தனியாக பெரிய வீட்டில் இருந்தேன். அன்று நிலவி ஒளி பட்டம் பகல் போல் காட்சி அளித்தது. அதனால் தா படுப்பதற்கு முன் தற்பாதுகாப்பாக ஏதேதோ செய்தே எனக்கு ரொம்ப திருப்தி. நிம்மதியாகத் தூங்கிவிட்டேன்.

நடு இரவு, திடீரென ஒரு ஆட்டத்தில் முளித்தேன். கட்டி மெதுவாக நகர்ந்தது. ஜன்னல் பக்கம் நோக்கிச் சென்றது எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஐயோ! கயிற்றைக் கட்டி வி காலில் மாட்டி யாரோ இழுக்கிறார்களே திருடனோ! என்ற பயந்தேன். ஆனால் ஒரு செகண்டில் எல்லா இடத்திலும் த தட என்ற சத்தம் கேட்க ஆரம்பித்தது. ஆம் பூமி அதிர்ச்சிதான் இரண்டு மூன்று செக்கண்டு என்றாலும் ஆளை உலுக் விட்டது. "இயேசுவே, இயேசுவே" என்றன என் உதடுக கடகடவென்ற சத்தம் மெதுவாக நின்றது. கடந்து சென்றது.

"மேம்சாப்", "மேம்சாப்" (அ. மா... அம்மா) என்று கை யில் டார்ச்சுடன் பின்னால் வந்த காவல்காரன், "எர்த்குவேக" "எர்த்குவேக" என்றான்.

"அச்சா ஹை" சர்சு, தோனபாத்" (நன்றி) என்றேன் காவல்காரன் பெயர் சர்சு "ஆப்கோ ஹிம்மத் ரேகோ மேம்சாப்" (நீங்க பயப்படாதிங்க அம்மா) என்றான்.

நான் என்னை பாதுகாத்துக்கொள்ள எப்படி யோசனை செய்தேன். அதை நம்பினேன் தைரியம் வைத்தேன். நா செய்த துணி பொம்மை என்னைக் காக்க முடியுமா? நம்மை உருவாக்கினவர், நம்மைக் காக்கிறவர் கர்த்தர்தானே. இயற்கை அதிகாரி கர்த்தர்தானே. அவர் கட்டளையிட அனைத்து நிற்குமே. நம் கரத்தில் எடுக்க முடியுமா?

போனவாரம் என் கணவர் தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தவர், "வா...வா இங்க சீக்கிர வா" என்று என்னைக் கூப்பிட்டார். நான் விரைந்து சென்றேன்.

"இந்த ஆட்டுக்குட்டிகளைப் பார்" என்றார்.

"ஆமா, ரொம்ப அழகாக இருக்குது. என்ன விஷயம்?"

"இது மனிதனால் படைக்கப்பட்ட ஆடு. அதுதான் தற் சமயம் புதிதாக *Cloning* (குளோனிங்) என்று சொல்லுகிறார் களே, அதுதான் இது" என்றார். அதற்குள் செய்தி முடிந்திட அவர் எழுந்தார்.

என் மகன் சுரேஷ் இடம், "மனிதனால் உண்டாக்கப் பட்டதா?" என்றேன்.

அம்மா, எத்தனையோ ஆண்டுகள் ஆராய்ச்சிக்குப் பின் உயிரணுவாகிய "நியூக்கிலியஸ்" மத்தியில் வலை போன்ற பின்னல் இருக்கிறது. அதில் ஆங்காங்கே குண்டு மணி போல் ஒரு சிறு உருவமிருக்கிறது. அதின் பெயர் "ஜினஸ்" *(Genes)*. அந்த மணியை இரண்டாகப் பிளந்தால் அதன் மத்தியிலிருக்கும் உயிரணுதான் டி.என்.எ *(DNA)*. அந்த *DNA* தான் ஒரு உயிரின் வாழ்க்கையிலுள்ள எல்லாத் தன்மைக்கும் அடிப்படையானது என்று கண்டுபிடித்தனர். ஒரு ஜீவனின் அறிவு, நிறம், உயரம், தன்மை எல்லாமே *DNA*யைப் பொறுத்துதான் அமையும் என்றும் கண்டனர். எல்லா நல்ல பண்புகளும் சக்தியும் நிறைந்த இந்த *DNA* உயிரணுவை ஆண் பெண் இரண்டிலும் எடுத்து, சோதனைக் குழாயில் சேர்த்து, பின் செயற்கை இயந்திரத்தின் மூலம் வளர வைத்து முடிவில் உயிருள்ள ஆடுகளை உருவாக்கு கிறார்கள். இந்த விதத்தில் உயர்ந்த ரகமான மனிதரையும் செய்யலாமாம், ஆனால்... என்று இழுத்தான்.

"என்ன ஆனால்" என்று கேட்டேன்.

இல்லம்மா, உலகத்தில் மிருகங்கள் மத்தியிலும் மனிதரிடமும் உண்டாகும் பலவித வியாதிகளுக்குக் காரணமே இந்த செயற்கை உயிர் ஜீவன் உண்டாக்கும் முறைதான், என்றும் கண்டுபிடித்து விட்டனர். இங்கிலாந்து தேசத்தில் மாடுகள் மத்தியில் ஏற்பட்ட மாட்டுப் பைத்தியம் *(Mad Cow)* இதன் விளைவு

தான். அதனால் இச்செய்கைக்கு உலகில் அதிக எதிர்ப்பு தெ
விக்கப்படுகிறது.

சுரேஷ் சுற்றுப்புறச் சூழ்நிலை ஆராய்ச்சிகள் பல கற்
ருப்பதால் அநேக காரியங்களைச் சொல்ல ஆரம்பித்தான்
ஒவ்வொன்றும் கேட்கவே பயங்கரமாக இருந்தது. அவன்
சொல்லி முடித்து எழுந்தான்.

அவன் போனபின் நான் ஏதேதோ நினைத்தேன்
புலம்பினேன். ஆண்டவரே மனிதனுக்கு நீர் அதிகமான
ஞானத்தைக் கொடுத்தீர். ஆனால் அவன் சிருஷ்டிப்பையே
தன் கையில் எடுக்கிறானே? அதின் விளைவுகள் பல, விபர
தங்கள் பல, சரி செய்ய முடியாத வியாதிகள் பல. மனிதனா
அவற்றை சரி செய்ய முடியுமா? பாஸ்டனில் ஏற்பட்ட விளை
எங்கும் பரவுகிறதே. மக்களை கொல்கின்றதே. அதை அவன்
தடுக்க முடியுமா?

அவன் கரத்தில் உள்ளதா? பாபேல் போல மனிதர்
எண்ணம் தாறுமாறாகிப் (ஆதி. 11:9) போகாதோ? நாசத்தின்
பாதையில் செல்லும் மானிடரைக் காக்க மாட்டீரோ?
உம்முடைய கரத்தின் கிரியைகள் அல்லவா மக்கள் கர்த்தாவே
இரங்கும்.

மனிதனால் முடியுமா?

“நீர் எங்களை உருவாக்குகிறவர். நாங்கள் உமது கரத்தின் கிரியை” (ஏசா. 64:8).

② எழுப்புவீரா?

"ஜேஸ்மின், அதை எடுத்துக்கொண்டு வா" என்று தன் கையை நீட்டிக் காட்டினார்கள் என் அமெரிக்க சிநேகிதி ஜனட் போபால்.

"மாட்டேன்" என்று சொல்லி தலையை அசைத்தேன்.

கையில் கமிராவை வைத்துக்கொண்டு "ப்ளீஸ்" என்றார்கள்.

"நோ" என்றேன்.

ஏன்? *Why* (ஒய்) என்றார்கள்

"நான் தொடமாட்டேன்" என்றேன்.

"முட்டாப் பெண்ணே ஏன்?" *(You silly girl why?)* என்றார்கள்.

"தொடமாட்டேன்" என்றால் தொடமாட்டேன் அது எனக்கு அருவருப்பு" என்று அழுத்தமாகச் சொன்னேன்.

"சரி நானே எடுத்துக்கொள்கிறேன்" என்று சொல்லி விரைந்து சென்று எடுத்து வந்தார்கள். நான் சற்று தள்ளி நின்று கொண்டேன்.

காட்பாடியில் என் கணவர், அமெரிக்கன் ஆற்காட்டு மிஷன் தொழிற்சாலையில் மேனேஜராகப் பணியாற்றினார். அங்கு கடைசியாக இருந்த அமெரிக்கன் அதிகாரிதான் திரு. *Harry* போபால். நானும் அவர் மனைவி ஜனட் போபாலும் அதிக அன்போடு பழகி வந்தோம். என்னை ஒரு சொந்த சகோதரி போல் நடத்துவார்கள்.. ஒரே பங்களாவில் அடுத்து, அடுத்து குடியிருந்தோம். எங்கே வெளியே சென்றாலும் நாங்கள் இருவரும் ஒன்றாகவே செல்வோம்.

அன்று ஒரு நாள்.... காட்பாடியிலிருந்து வேலூருக்கு நாங்கள் இருவரும் ஜீப்பில் சென்று கொண்டிருந்தோம். ஜனட் தான் ஓட்டிக்கொண்டு வந்தார்கள். நான் பக்கத்திலிருந்தேன். பாலாறு பாலத்தைத் தாண்டினவுடன் நேராக வேலூர் பாதையில் செல்லாமல், திடீரென பாலத்தின் இறக்கத்தில் இடது பக்கம் சட்டென திருப்பினார்கள். ஜீப் சுடுகாட்டின் வாசலில் நிறுத்தப்பட்டது. நான் சற்று அதிர்ச்சியடைந்தேன். அவர்கள் இறங்கி, "படமெடுப்போம்" என்று சொல்லிக் கொண்டே சுடு காட்டினுள் விரைந்தார்கள். நானும் வேறு வழியில்லாமல் தயக்கத்துடன் பின்தொடர்ந்தேன்.

எங்கும் நிசப்தமாக இருந்தது. சுடுகாட்டின் நடுவில் ஒரு தகரக் கொட்டகை இருந்தது. அங்குமிங்கும் பல எலும்புகளும், மண்டை ஓடுகளும், உடைந்த மண்பானைகளும் சிதறிக் கிடந்தன. ஜனட் மடமடவென்று சில எலும்புகளை எடுத்தார்கள். கொட்டகையின் அருகிலிருந்த படி ஓரமாக அடுக்கினார்கள். சில மண்பானைகளையும் அருகில் வைத்தார்கள். படியின் பக்கம் கொஞ்சம் முடியோடு ஒரு மண்டை ஓடு கிடந்தது. அதைத்தான் என்னை எடுக்கச் சொன்னார்கள். நான் மறுத்துவிட்டேன். எல்லாவற்றையும் பல விதமாக அடுக்கிப் பலகோணங்களில் படமெடுத்தார்கள். நான் வேடிக்கை பார்த்துக்கொண்டே அசையாமல் நின்றேன்.

அமெரிக்காவில் இந்த மாதிரியான காட்சிகள் எல்லாம் பார்க்க முடியாது. அதனால் ஜனட் போபால் எப்பொழுதுமே விபரீதமான காட்சிகள் அனைத்துமே படம் எடுத்து அமெரிக்கா போய் காட்டுவார்கள். பாடை முன் ஆடிப்பாடி போவது, கலைகூத்து, தெருக்களில் கூட்டம், பெரிய தண்ணீர் குழாயை தங்கள் வீடாக உபயோகிக்கும் ஏழை மக்கள், குரங்கு ஆட்டி, பாம்பு ஆட்டி எல்லாம் எடுப்பார்கள். இந்த முறை சுடு காடு.

எலும்புகளின் மத்தியில் நின்று கொண்டிருந்த என் எண்ணம் எங்கோ பறந்தது. எசேக்கியேல் தீர்க்கரின்

முப்பத்தேழாம் அதிகாரம் என் கண்முன் பளிச்சிட்டது. ஆண்டவரே இவையெல்லாம் ஒரு நாள் உம்மால் உயிர் அடையுமே. உயிரற்ற படம் அமெரிக்கா போகலாம், ஆனால் இங்கு தானே அது உயிர் பெறும். சில எலும்புகள் வேலூர் மருத்துவக் கல்லூரிக்கும், சி.எம். சிக்கும் பாடம் கற்றுக் கொடுப்பதற்காகச் சென்றாலும் அவற்றை எல்லாம் சேர்த்து ஒன்றாக்குவீரா? அவற்றையெல்லாம் ஒரு இடத்திற்குப் பறந்துவரப் பண்ணு வீரா அப்பா! என்றேன்.

“ஜேஸ்மின்” (திடுக்கிட்டேன்) ஏன் சிலைபோல நிற்கிறாய்? *(Why do you stand like a statue)* வா போகலாம் *(Let us go)* என்றார்கள்.

மீண்டும் ஜீப்பில் ஏறிச்சென்றோம். வேலூரில் வாங்க வேண்டிய பொருட்கள் வாங்கி, *A.S.A* பேக்கிரியில் ரொட்டியும் வாங்கி காட்பாடிக்குத் திரும்பினோம். சுடுகாட்டைப் பற்றி பேசிக் கொண்டே வந்தோம்.

“உனக்கு சுடுகாடு என்றால் பயமா?” என்றார்கள்.

“எனக்கு பயமில்லை, ஆனால் அதையெல்லாம் தொட விருப்பமில்லை” என்றேன்.

இரவு பத்து அடித்தது. நான் படுத்தேன். கண் முன் வந்து நின்றது பலவிதமான எலும்புகளின் காட்சி. “ஆண்டவரே இப்படி தானே இருந்திருக்கும் அந்தக் கபாலஸ்தலம்,” என்று புலம்பினேன். பின் அரபிக் மொழியில் அது ‘கொல்கதா’ என்று அழைக்கப்பட்டது ‘கொல்கதா’ என்றால் ‘மண்டை ஓடு’ என்பது பொருள். அப்படியானால் இடவாகு பெயர் தானே அது? அந்த மலையும் பார்க்க ‘மண்டை ஓடு’ போலிருக்குமாமே. சற்று சிந்தித்தேன்.

எங்கள் வீட்டில் ஒரு படம் முன்காலத்தில் இருந்தது. அதில் சிலுவைக் காட்சியின் கீழ் பல மண்டை ஓடு எலும்புகளும், மற்ற எலும்புகளும் தானே சிதறிக் கிடக்கும். ஆதலால்தானே அது காபலஸ்தலம் என்று அழைக்கப்பட்டது. அங்கே

சிலுவையில் மரித்த பல கைதிகளின் எலும்புகள் தானே சிதறிக் கிடந்திருக்கும்?

ஆனால் ஆண்டவரே நீர் உயிர்த்தெழுந்தீர் அல்லேலூயா! உம்முடைய எலும்புகள் ஒன்றும் அங்கே இல்லை. உம்முடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படவுமில்லை (யோவான் 19:6). ஒரு சிறு துண்டும் அங்கே இல்லை!

மண்டை ஓட்டைப்பற்றி ஒருவர் எழுதும்போது, "மனிதனின் அழகையும், அந்தஸ்தையும் இழந்த உருவம் அது. கண்ணிருந்த இடத்தில் ஒளி இல்லை, ஞானமிருந்த இடம் காலி, மனிதனின் வலிமையும், பெண்ணின் கிரீடத்தையும் காட்டும் முடியுமங்கில்லை" என்கிறார். மேலும் கிறிஸ்துவை விட்டு விலகி பாவத்தில் வீழ்ந்துவிடும் ஒவ்வொருவனுக்கும் அவனின் ஒளி, ஞானம், அழகு எல்லாம் போய்விடும். அவன் பயனற்ற பல்லை மட்டும் இளித்துக் காட்டுகிறவனாக இருக்கிறான் என்கிறார். ஆனால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாக சாவுக்கேதுவாகிய நாம் சாவாமையையும் தரித்துக் கொள்ளுகிறோமே.

"மரணமே! உன் கூர் எங்கே?

பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1 கொரி. 15:35)

அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்.

③ பரீட்சையோ பரீட்சை

அறையில் எங்கும் அமைதி நிலவியது. ஒரு குண்டூசி வீழ்ந்தாலும் அதின் சத்தம் கேட்குமளவிற்கு அமைதி. கடிகாரத்தின் டிக்..டிக்.. ஒலி மட்டும் கேட்டது. ஆம் அரசாங்கத் தேர்வாச்சே மேலும் கணக்குப் பரீட்சை, கேட்க வேண்டுமா? மாணாக்கர் கூர்ந்து கேள்வித்தாளைப் பார்த்துக் கொண்டிருந் தனர். ஒருவரும் ஆடவுமில்லை அசையவுமில்லை. சிலர் முகம் மலர்ந்தது, சிலர் முகம் வெளிறிக் கொண்டிருந்தது.

ஆண்டுகள் முன் எஸ். எஸ். எல். சி தேர்வு, அரசாங்கம் குறிக்கும் ஏதாவது ஒன்று இரண்டு மையங்களில்தானே நடக்கும். மாணாக்கர் வேறு ஊர் சென்று எழுதவேண்டும். இக்காலம் போல லட்சக்கணக்கான மாணாக்கரும் கிடையாது.

கணக்குப் பரீட்சையில் தன்முழு கவனத்தையும் வைத்து எழுதிக்கொண்டிருந்தான் மாணவன் ஆபிரகாம். ஆபிரகாம் மூலம் தங்கள் பள்ளிக்கே முதலிடம் கிடைக்குமென எதிர்பார்த் தனர் பள்ளி ஆசிரியர்கள். அவன் வகுப்பிலும் எல்லாவற்றி லும் முதல் இடம் பெறுவான். மேற்பார்வைக்காக வந்த ஆசிரி யர் பையன்கள் எழுதுவதைப் பார்த்துக் கொண்டே சுற்றி வந்தார். அவர் பள்ளிப்பையன்தான் ஆபிரகாம். அவர் திடீ ரென பார்த்தபோது ஆபிரகாம் கவனக்குறைவால் கணக்கின் முடிவில் தவறு ஒன்று போட்டிருப்பதைக் கண்டார். பத்தின் கீழ் இரண்டு போட்டு வெட்டி, ஐந்து என்று விடை எழுதுவ தற்குப் பதில், பத்தையே போட்டு விட்டான். அரசாங்கத் தேர் வாச்சே எப்படிச் சொல்ல முடியும்? ஆசிரியர் ஆபிரகாம் அரு கில் வரும் தருணம் எல்லாம் தொண்டையில் இலேசாக செறு மினார், கனைத்தார். முதலில் ஆபிரகாம் கவனிக்கவில்லை என்றாலும் பின்பு கவனித்தான். ஏன் அந்த ஆசிரியர் தன் அருகில் வரும்போதெல்லாம் ஏதோ சத்தம் உண்டாக்குகிறார்.

தலை நிமிர்ந்து ஆசிரியரைப் பார்த்தான். ஆசிரியர் தன் இடது கை ஆள்காட்டி விரலை வலதுகை ஆள்காட்டி விரலால் வெட்டிக் கொண்டே போகிறார். வருகிறார். பார்ப்பவர் ஏதோ தாளம் போடுகிறார் என்று நினைப்பார்கள். அவர் குறுக்கும், நெடுக்குமாக நடப்பதைக் கண்டு, ஏன் இப்படிச் செய்கிறார் ஏன் வெட்டி வெட்டி காட்டுகிறார் என்று தன் விடைத்தாளைப் பார்த்தான். மேலே உள்ள ஒரு பெரிய கணக்கின் முடிவில் தான் செய்திருக்கிற தவறைக் கண்டான். தனது கவனக்குறைவால் ஐந்திற்குப் பதில் பத்து போட்டிருப்பதைக் கண்டான். சிந்தனை செய்தான் ஆபிரகாம். அவர் அப்படிக் காட்டி, தான் சரி செய்வது சரியா? தவறா? என சிந்தித்தான். அவனது மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. ஆபிரகாம் தவறைக் கண்டும் சரி செய்யவில்லை.

நேரம் முடிந்தது. மணி டங் டங் என்று அடித்தது. பரிட்சைத் தாளை மடித்துக் கொடுத்து விட்டு ஆபிரகாம் வெளியே வந்தான். ஆசிரியர் மெதுவாக ஆபிரகாமிடம் "சரிப் படுத்தினாயா?" என்றார்.

"இல்லை சார்"

"ஏன் நான்தான் தெளிவாக சைகை காட்டினேனே"

"நீங்கள் காட்டி நான் பரிட்சையில் சரி செய்வது தவறு என்றது என் மனசாட்சி" என்றான் ஆபிரகாம். ஆசிரியர் அதிர்ச்சி அடைந்து கண் கொட்டாமல் ஆபிரகாம் போகிறதைப் பார்த்து நின்றார்.

ஆபிரகாம் பெரியநாயகம் பி.எ. எல்லாம் படித்து முடித்து, பிற்காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் சி.எம்.எஸ் உயர்தரப்பள்ளியில் *(High School)* தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். கர்த்தருக்காக சுவிசேஷ வேலையில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தார். அவர் என் தந்தையின் தந்தை, எனது பாட்டனார்.

ஆண்டுகள் பின், எனது அண்ணனுக்கு ஒரு சிநேகிதர் இருந்தார். அவர் இருமுறை எஸ். எல். சியில் தவறிவிட்டார்.

மூன்றாம் முறை எழுதிய அன்று வீட்டிற்கு அண்ணனைப் பார்க்க வந்தார்.

“ஆமா எப்படி எழுதினீர்கள்?” என்றேன்

“இந்த முறை நிச்சயமாக பாஸ்”

“அப்படியா ரொம்ப சந்தோஷம். நல்லா எழுதி இருக்கிறீர்களா?”

“அப்படி இல்லை சிஸ்டர் இந்தமுறை பேப்பர் கூடவே இன்றே போகிறேன்”

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. விடைத்தாள் எங்கே போகிறதோ என்று கணடு அங்கு போய் பணம் கொடுத்து தேர்வு பெற முயற்சியா? அது எவ்வளவு தவறு.

சில தினங்கள் முன் என் மருமகளிடம் தொலைபேசியில் பேசினேன். இரண்டு முறை எடுத்துவிட்டு வைத்த சத்தம் கேட்டது. மீண்டும் எடுத்தேன். “என்னம்மா சுஜா, இருமுறையும் எடுத்தாற் போல் சத்தம் கேட்டது. பின்சத்தம் இல்லை. பரிட்சை எல்லாம் முடிந்துவிட்டதா? எப்போ வருகிறீங்க?” என்றேன்.

“அம்மா எங்க கல்லூரியல் ஒரு பையன் துண்டுத்தாள் வைத்து எழுதினான். நானே அவனை கஷ்டத்துடன் வெளியே அனுப்பிவிட்டேன். அவன் முதலில் போக மறுத்தான். பின் போய்விட்டான். இன்று பலமுறை எனக்கு பயம்காட்டி போன் செய்கிறான். அதனால் தான் தொலைபேசியை தொடவே தயங்குகிறேன்.”

எவ்வளவு துணிகரமாக இருக்கிறார்கள் தற்காலத்து மாணவர்கள். ஆபிரகாம் தாத்தாவை ஒப்பிட்டுப்பார்த்தேன்.

இந்தவாரம் எனக்கு அறிமுகமான பெண் ஒருவள் வந்தாள். “என்ன பிள்ளைகளுக்கெல்லாம் பரிட்சையா?” என்றேன்.

"இந்த முறை பயமில்லை ஆண்டி, கேள்வித்தாள் வெளியாகிவிட்டது. சி. எஸ். ஐ பள்ளிகளுக்கெல்லாம் திருநெல்வேலியிலிருந்து கேள்வித்தாள் வருகின்றது. என் சின்ன மகள் வாங்கப் போயிருக்கா"

கத்தரிக்கா வாங்குவது போல் கேள்வித்தாள் வாங்கி எழுதுவதா? அதுவும் ஐந்தாம் வகுப்பில் கர்த்தாவே! காலம் கெட்டுப் போச்சே அப்பா!

நவநாகரீக காலமாச்சே. பேஜர் (*Pager*) என்ற ஒரு சிறு பாக்கெட் மிஷனை கையில் வைத்துக் கொண்டால், கம்யூட்டர் போல் அதில் கேள்விக்குப் பதில் வந்து கொண்டே இருக்கிறதாம். வெளியே இருந்து பதில் அனுப்பினால் இதில் பதிவு ஆகிறது. என்ன விஷயம் கேட்டாலும் அதெல்லாம் ஹைடெக் (*High-Tech*) என்கிறார்கள். இப்படிப்பட்ட திருட்டுத்தனங்களையெல்லாம் கேட்கவே பயமாக இருக்கிறது. கர்த்தர் தான் மக்களுக்கு நல்ல ஞானத்தைக் கொடுக்க வேண்டும்.

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்... தேவனிடத்தில் கேட்கக்கடவன்.... அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக். 1:5)

④ வீட்டைக் கட்டிப்பார்

கட..... கட... கடவென்று வண்டிகள் வருவதும் டமார், டமார் என்று இடிக்கும் சத்தமும் எங்கள் தெருவில் கேட்டது. எங்கு பார்த்தாலும்தான், தற்சமயம் கட்டிடங்களை இடித்து 'பிளட்' கட்டுகிறார்களே என்று நினைத்தேன். ஆனால் நம்ம தெருவில் இப்போதானே இரண்டு ஆண்டுகளுக்குப் பின் கட்டிட வேலை முடிந்தது என்று எண்ணிக்கொண்டு, வீட்டின் முன் பக்கம் போய் தெருவில் எட்டிப்பார்த்தேன். மூன்றாவது வீட்டின் வாசலருகே செங்கல்கள் அடுக்கப்பட்டிருந்தன. அந்த வீட்டின் முன், என் உதவியாள் கடைக்குப் போய் விட்டு அந்தப்பக்கமாக வந்துகொண்டிருந்தவள், சற்று நின்று ஏதோ பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டேன். சரி, அவள் விசாரித்துத்தான் வருவாள், வந்தவுடன் கேட்கலாமென்று உள்ளே வந்தேன்.

“ஆமா, சௌந்திரம், என்ன அந்த வீட்டையும் இடித்து 'பிளட்' கட்டப்போகிறார்களா?” என்றேன்.

இல்லம்மா, முன்னால நம்ம தெருவில் இருந்த கேட்டை (*Gate*)யை எடுத்துவிட்டு, அடுத்தபக்கம் அடுத்த தெருவில் வைக்கப்போகிறார்களாம். அதனால இந்தப் பக்கத்தை அடைக்கிறாங்க. அடுத்தப் பக்கம் உடைக்கிறாங்க. அதுக்குத்தான் செங்கல் வந்திருச்சு, வேலையும் நடக்குது.

ஏன் அப்படி மாத்திராங்கன்னு கேட்டியா?

“கேட்டேம்மா, கேட்காம விடுவேனா? அதுக்கு பாக்கலாமே அடுத்த பக்கம் என்ன ராசி வந்து குவியுதுன்னு”

“சரி, சரி அது அவுங்க நம்பிக்கை, அதைப் பற்றி நம்ம கேலி செய்யக்கூடாது. விட்டுவிடு” என்றேன்.

சௌந்திரம் உள்ளே போய்விட்டாள். தெற்கு நோக்கி இருந்த வாசலை கிழக்கே வைக்கிறார்களே. தெற்கு நோக்கி இருக்கிற வீட்டிற்குத் தானே காற்று நன்றாய் வரும். சற்று யோசித்தேன். சில தினங்கள் முன் என் கணவர் வீட்டுப் படங்கள் பல போட்ட ஒரு வாரப்பத்திரிக்கையை என்னிடம் கொடுத்து, "இதை வாசித்துப் பார், வஸ்து சாஸ்திரம்" என்றார். ஆனால் நான் அதை வாங்கி வைத்துவிட்டேன். வாசிக்கவில்லை. இன்று, சரி அதைத்தான் பார்ப்போமே, என்ன சொல்லு வதுன்னு" என்று நினைத்துக்கொண்டு எடுத்தேன்.

"வஸ்து சாஸ்திரத்தின்படி" ஒரு வீடு எந்தத் திசையைப் பார்த்து இருக்க வேண்டும், எந்த இடத்தில் அலுவல் அறை எந்த இடத்தில் படுக்கும் அறை, எங்கே சமையல் அறை எத்திசையை நோக்கி முன் வாசல் இருக்கவேண்டும், இந்த அமைப்பில் இல்லாவிட்டால் அந்த வீட்டிற்கு நஷ்டமும், கஷ்டமும் பலவகையில் வரும். பொதுவாக வடகிழக்கு அல்லது தென் மேற்கு திசை நோக்கி வீடு கட்டப்பட வேண்டும். எட்டுத்திசையின் கடவுள்களின் ஆசீர்வாதம் அப்பொழுது தான் கிடைக்கும் என்று எல்லாம் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் இயற்கையின் விதிகளையும் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். உலக உருண்டை சுற்றுப் போக்கிலேயே விதிப்படி வீடு கட்டப்பட்டிருக்க வேண்டும். வடக்கே தலைவைக்கும் படி படுக்கை போடக் கூடாது. வடபக்கம், வடதுருவத்தின் காந்த சக்தியின் இழுப்பு அதிகம், அது உடலுக்கு நல்லதல்ல என்றும் கூறப்பட்டிருக் கிறது.

தற்சமயம் அமெரிக்காவில் ஒயிட்ஹவுஸில் உள்ள ஓவல் அலுவலகம் கூட சைனா தேசத்தைச் சேர்ந்த "பெங்சுய்" உடைய வஸ்து சாஸ்திரத்தின் அடிப்படையில் கட்டப்பட்டதாம். அதனால் தான் ஜனாதிபதி கிளின்டன் வெற்றி பெற்றார் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். இன்றும் எல்லாத் துறையிலும் உள்ள பெரிய தலைகள் கூட இதன்படி தங்கள் வீடுகளை அமைக்கிறார்களாம். எப்படி இருக்கிறது?

வாசித்துவிட்டு புத்தகத்தைக் கீழே வைத்தேன். நம்ம இருக்கிற வீட்டை எப்படி நம்ம கட்டினோம் என்று சிந்தித்தேன்...... ஆண்டுகள் முன்......

"ஜேம்ஸ்" என்று கூப்பிட்டார், நகர சீர்திருத்தக் குழுவின் *(City Improvement Trust)* தலைவர் திரு. ஞானஒளிவு.

"எல்லா வீட்டு மனைகளும் போய் விட்டன. ஒரு *(Irregular)* ஒழுங்கு இல்லாத *Plot* ஒன்று இருக்கிறது வேண்டுமா? அதில் இடது பக்கம் ஒரு பெரிய கிணறு மூடப்பட்டிருக்கிறது, அதனால் அங்கே கட்டிடம் கட்ட முடியாது" என்றார்.

"சரி" நீங்க சொன்னால் சரி" என்று சொல்லி மனையை எடுத்துக்கொண்டோம்.

மற்றவர் வேண்டாமென்ற இன்னும் இரண்டு மனைகளும் கிறிஸ்தவர் எடுத்துக்கொண்டனர். வீட்டுக்நேராக ஒரு தெரு வந்து முடிந்தால் 'குத்து' என்று மற்றவர் வேண்டாமென்றனர். கடவுளின் கிருபையால் நாற்பது ஆண்டுகள் மேலாகியும், இந்த மூன்று வீடுகளும் ஆசீர்வாதமாகவே இருக்கின்றன. எங்கள் வீடு தெற்கே பார்த்ததுதான். மற்றவையும் மேற்கே பார்த்தவைதான். கர்த்தரின் கிருபைதான்.

நாம் திருமறையில் பார்ப்போமானால், "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" (சங். 127:1) என்று கூறப்பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல் அவர் வார்த்தையைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன் தான் உறுதியாகக் கன்மலையின் மேல் வீட்டைக் கட்டினவனுக்கு ஒப்பாக இருப்பான் என்கிறார். "வஸ்து சாஸ்திரம்" கேட்டு செய்பவர்கள் அல்ல.

கிறிஸ்தவர்களாகிய நாம் இவற்றின் பேரில் நம்பிக்கை வைக்கலாமா? கிறிஸ்த வரும் நேரம், காலம் இடம் பார்க்கிறார்களே! சமீபத்தில் ஒரு புதுவீடு புகும் அழைப்பிதழ் வந்தது. அதில் காலை 6.30க்கு என்று போட்டிருந்தது. நல்ல நேரமா! இஸ்ரவேல் புத்திரரின் வீடுகள் இரத்தத்தால் காக்கப்பட்டது

போல இயேசுவின் இரத்தக்கோட்டைக்குள் அல்லவா நம் வீடுகள் இருக்க வேண்டும். இது தான் முக்கியம், வடக்கு தெற்கு என்பதல்ல. இந்த ஞானம் தான் வேண்டும். வஸ்து சாஸ்திர ஞானமல்ல. ஞானம் தன் வீட்டைக் கட்டுகிறது (நீதி 9:1). நாம் அவர் வார்த்தையைக் கேட்கும் போது அவர் நமக்கு அக்கினி மதிலாக சுற்றி இருப்பார். சாஸ்திரம் மதிலாகாது.

நான் அதற்கு சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (சகரியா 2:5).

⑤ ஆம்... ஆமாவேதான்

வாசலில் கிரிங்...கிரிங் என்று மணியை அழுத்தும் சத்தம் கேட்கவே முன்பக்கம் விரைந்தேன்.

"வாங்க வணக்கம்" என்றேன். ஆனால் வந்தவர் வாசலின் வெளியே தொங்க விட்டிருந்த வசனத்தையே கூர்ந்து பார்த்துக்கொண்டு நின்றார். பின் சத்தமாக வாசித்தார் "*Jesus never fails*"

"ஏன் இப்படி போட்டிருக்கேள்?" இது *Negative* வாக்கும், *positive* வான்னோ போடணும்" என்றார்.

நான் சற்று தயங்கி நின்றேன். "இருபத்துநாலு மணி நேரத்திற்குள்ளே அதை மாற்றிடுங்கோ" என்றார்.

தன் அறையிலிருந்து வெளியே வந்த என் கணவர், அவர் சொன்னதைக் கேட்டு, "அதே தான் நானும் அவளிடம் சொல்வது, இல்லை என்பதே வேண்டாம். "*Be postive*" என்றார். அந்தக் கட்சி வலுவடைந்ததால் நான் மெதுவாக இடம்விட்டு நகர்ந்தேன்!

உள்ளே சென்ற நான் நம்ம வீட்டில்தான் இப்படி என்றால், பக்கத்து வீட்டு திரு வெங்கட்ட கிருஷ்ணன் அண்ணாவும் இப்படிச் சொல்ராரே. சரி நாற்பது ஆண்டுகளாகப் பழகியவர் ஒரு சொந்தத் தங்கையிடம் சொல்வது போலச் சொல்லுகிறார் என்று நினைத்துக்கொண்டு, என்னிடமிருந்த மற்றொரு வசனப்பலகை ஒன்றை பழையதை எடுத்துவிட்டு, மாட்டினேன். இதில் "ஜெயமோ கர்த்தரால் வரும்." நீதி: 21:31 என்று இருந்தது. ஒரு வாரம் கழித்து அவர் திரும்ப வரும்போது வாசலில் மாற்றி இருப்பதைக்கண்டு "மாற்றி விட்டேளா, *Very good*' என்று சொல்லி அவரே சிரித்துக் கொண்டார்.

"இல்லை" என்ற வார்த்தையே வாயில் வரக்கூடா
என்கிறாயே, சின்ன வகுப்புகளில் "எதிர் மறைச்சொல்
மாற்றி அமைத்து, அர்த்தம் பிசகாமல் எழுது" என்று கேள்வி
தாளில் வரும். இப்போ?...இப்போ? வாழ்க்கையில்?......இப்ப
யோசித்துக் கொண்டே சமையல் அறைக்குச் சென்றேன்.

நாளை என் மகனும், மருமகளும் வருகிறார்களே. இ
வருக்கும் குலாப்ஜாமூன் என்றால் அதிக விருப்பம். எப்பொ
தும் அவர்கள் வரும் முன்பே ஒரு லிட்டர் பாலை வாங்கி கிளறி
கிளறிக் காய்த்து கட்டியாக்குவேன். இந்த முறை கொஞ்ச
எழுத்து வேலைகள் அதிகமிருந்ததால், அப்படிச் செய்யவில்
சரி *Readymade mix* வாங்கிச் செய்யலாம் என்று ஆரம்பித்தே
அதில் சொல்லியிருப்பதுபோல் எல்லாம் சேர்த்தேன். சிறு சி
உருண்டைகளாக உருட்டினேன். பின் சனோலா எண்ணெ
காய்ந்தவுடன் எடுத்து, சர்க்கரை பாகில் போடும்முன் ஒ
தட்டில் வைத்தேன்.

சரியாக அந்த நேரம் பார்த்து என் கணவர் சமைய
அறைக்குள் எட்டிப் பார்த்தார். பார்த்தவர் "உருளை
கிழங் கா?" "*Good* ஜோர் ஜோர்" பார்க்கவே அழகா
இருக்கிறது" என்றார் தூரத்திலிருந்தே.

"இல்லை", குலாப்ஜாமூன், என்று சொல்லக்கூடா
'இல்லை' என்ற சொல் முதலில் வருகிறதே என்று நான்
தித்துப் பதில் கூறும் முன்பு அவர் போய்விட்டார்.

சில நாட்கள் முன் ஒரு புத்தகம் வாசித்தேன். அதின் பெ
'*Positive Image*' அதில் வாழ்க்கையில் முன்னேற தன்னம்பிக்
வேண்டும். எதிர்மறையான எண்ணம், செய்கை, நடை, உ
பாவனை எதுவுமே தகாது என்று பலவித வர்ணிப்புகளே
டும், படத்தோடும் போட்டிருந்தது. இக்காலத்தில் எங்கு பா
தாலும் பல புத்தகங்கள் இதைப்பற்றி வெளிவருகின்றன.
எண்ணங்கள் எல்லாம் 'ஆம்' என்றே இருக்க வேண்
என்பதுவே கருத்து.

நான் உட்கார்ந்து என் அறையில் இதைச் சிந்தித்தேன். எனக்கு ஒருவரைப்பற்றிய எண்ணம் மனதில் தோன்றினது. சில ஆண்டுகள் முன் எங்கள் வீட்டுக்கு ஒரு பெரியவர் வருவார் வழக்கம்போல் சிரித்த முகத்துடன் வருவார்.

"என்ன எப்படி இருக்கிறீர்கள்?"

"கர்த்தர் எல்லாம் கொடுத்திருக்கிறார். நன்றாய் இருக்கிறேன்" என்பார்.

ஆனால் அவர் அணிந்திருக்கும் அங்க வஸ்திரம் என்னுடைய பழைய புடவையை அவருடைய மகளுக்கு கொடுத்து, மகள் அதைக் கட்டி கிழித்து, பிறகு அதை இவர் கிழிவு தெரியாமல் மடித்து, சில ஜரிகைப் பகுதிமட்டும் தெரிய சலவைப் பெட்டியால் தேய்த்து மடிப்பு நீங்காமல் அழகாகப் போட்டிருப்பார். நான் கண்டு கொள்வேன். ஆனால் அவரோ இல்லையென்ற வார்த்தை இல்லாமல் "எல்லாம் கொடுத்திருக்கிறார்" என்பார். அதை அவர் சொல்லும்போது, அவர் முகத்தில் காணப்படும் ஆனந்தம், இன்றும் என்னால் மறக்க முடியாது. கர்த்தர் மேல் எவ்வளவு நம்பிக்கை அவருக்கு! அவர் மனநிறைவுதான் என்ன! இதுவே *'Positive Artitude'* என்று சிந்தித்தேன்.

கிறிஸ்தியான் சந்தேக மாளிகையில் *(Doubting Castle)* அடைபட்ட போது முதலில் யோசிக்கவில்லை, பிறகு "ஆ எனது பாக்கெட்டில் வாக்குத்தத்தம் என்னும் சாவி இருக்கிறதே" என்று எண்ணினான். அதை எடுத்து பயன்படுத்தி எல்லாக் கதவுகளையும் திறந்தான். ஒரு பெரிய இரும்புக் கதவு குறுக்கிட்டது. சற்று திகைத்தான். பின் யோசித்து, அதுவும் வாக்குத்தத்தால் திறக்கப்பட்டது.

பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். "தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் கிறிஸ்துவுக்குள் "ஆம்" என்றும் அவருக்குள் "ஆமென்" என்றும் இருக்கிறதே (2 கொரி 1:20). கிறிஸ்துவின் மூலமாக தேவன் அருளிய வாக்குத்தத்தங்கள்

Bro. T. Paul Prabhakaran
Madhapura Village
Chamarajanagar-571313
KARNATAKA

அனைத்தும் நிறைவேறின. ஒன்றும் இல்லையென்று ஆ
வில்லை. எல்லாம் ஆம்தான்.

இதை நாம் நினைக்கின்றோமா? உலகப்பிரகார
"இல்லை" என சொல்லக்கூடாதெனில் ஆவிக்குரிய பிரகார
சொல்லலாமா? இல்லையென்ற பஞ்சப்பாட்டு பாடுகிறோமா
கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து நித்தம், துதிக்கிறோமா
நித்தம், நித்தம் நினைக்கிறோமா? நினைப்போம்.

"இயேசு கிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்று இல்லாமல் ஆம் என்றே இருக்கிறார்" (2 கொரி. 1:19)

⑥ புத்திர சுவிகாரம்

"குடி——குடி" என்று சொல்லும் சப்தம் கேட்டேன். மணி மாலை மூன்று இருக்கும். பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளைகள் கூட திரும்பி இருக்கமாட்டார்களே, யாரைக் குடிக்கும்படி சொல்லுகிறார்கள் என்று ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன். நானே அசந்து விட்டேன்.

பக்கத்து வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் மத்தியில் வேலி தான். நாங்கள் இரு குடும்பமும் கடந்த நாற்பது ஆண்டுகளாக, பக்கத்து வீட்டார். பக்கத்து ஆத்தில் உள்ள திரு. வெங்கட்ட கிருஷ்ணன் எங்களை தம் சிநேகிதருக்கு அறிமுகப்படுத்தும் போது எங்க நேபர்-இன் லா *(Neighbour in-law)* என்பார். அவர் முகத்தில் அப்பொழுது ஒரு புன்னகை தோன்றும். வேலியின் அருகே நின்றே நாங்கள் பேசிக்கொள்வோம். ஒரு மனவருத்தமும் வந்ததில்லை. எங்கள் மத்தியில் 'ப்ளட்' கட்டினால் வேலி போய்விடுமே என்ற வருத்தமும் எனக்கும் ராஜம்மாவிற்கும் உண்டு.

கண்ணம்மா பக்கத்துவீட்டில் பல ஆண்டுகளாக வேலை செய்யும் ஆயா... தலை முறைகளை அக்குடும்பத்தில் பார்த்தவள். சுகதுக்கங்களில் பங்கு கொண்டவள். அவள் நல்ல உழைப்பாளி. மழையோ, வெயிலோ, குளிரோ எதுவும் அவளை ஒன்றும் செய்ய முடியாது. தலையெல்லாம் நரைத்து வெள்ளிக் கயிறுபோல் இருந்தாலும், வயது எழுபதைத் தாண்டினாலும் இன்னும் அங்கு வேலை செய்கிறாள். வாசல் பெருக்கி, கோலமிட்டு, பத்துத்தேய்த்து பலவீடுகளில் பூவும் பறித்துக்கொண்டு வருவாள் அவர்கள் சாமிக்கு, பின் துணி துவைப்பாள்.

கண்ணம்மாவின் மகள் போய்விட்டாள். மூன்று பேத்திகள், மூன்று பேரையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள். பேத்திகள் மேல் மிக்க பாசம். மைலாப்பூரில் வீடு எடுத்து தன் பேத்திகளுடனும், மருமகனுடனும் வசித்து வந்தாள். பிள்ளைகளை கஷ்டப்பட்டு படிக்க வைத்தாள். பிள்ளைகள்

வீடு திரும்பி விடுவார்கள் பள்ளியிலிருந்து என்று மாலை நேரம் வீட்டிற்கு ஓடுவாள். அதுவும் ஒரு முற்றுப்புள்ளிக்கு வந்தது. மருமகன் தன் மகள்கள் மூன்று பேரையும் கூட்டிக்கொண்டு தன் சொந்த ஊருக்குப் போகத் தீர்மானித்தான். போயும் விட்டான்.

கண்ணம்மா வயதான காலத்தில் தனித்தவளானாள். பொருட்களை எல்லாம் விற்றாள். வீட்டை காலி செய்தாள், வேலை செய்யும் இடத்திலேயே பின்னால் இருந்த அறையில் தங்கிவிட்டாள். ஆனால் என்ன இருந்தாலும் அவள் தனிமையை உணர்ந்தாள். வாழ்க்கை சூனியமாகிவிட்டது யோசித்தாள்.... யோசித்தாள் ஒரு அழகான, பிரவுன் நிற வரி வரியான பூனைக்குட்டி ஒன்றை வளர்க்க ஆரம்பித்தாள்.

நான் எட்டிப் பார்த்தேன். கண்ணம்மா தரையில் அமர்ந்து தன் இரண்டு காலையும் நீட்டி, கால்களின் மத்தியில் பூனைக்குட்டியை மல்லாக்க படுக்க வைத்து, "குடி.. குடி" என்று சொல்லி அதின் வாயில் பாலை ஒரு தேங்காய் சிரட்டையில் வைத்து ஊற்றிக் கொண்டிருந்தாள். மேல் எல்லாம் உதறி பால் சிந்தவே, எழுந்து ஒரு துணியை நன்றாய் தண்ணீரில் மூக்கி எடுத்து துடைத்தாள். பூனைக்குட்டி ஈரத்துடன், நீரில் வீழ்ந்த எலிபோல் பரிதாபமாக காட்சி அளித்தது. கத்தினது இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த நான் "என்ன கண்ணம்மா பூனைக்குட்டி பால் குடிக்கவில்லையா?" என்றேன்.

"ஆமா அம்மா அந்த டீ கடைக்காரர் வீட்டிலிருந்து கொண்டு வந்தேன், அம்மா அது டீயும், பிஸ்கட்டும்தான் சாப்பிடுவேன் என்று அடம் பிடிக்கிறது. பால் கூட வேண்டாமாம் பாரும்மா, இரவு தொந்திரவு செய்தால் கொடுக்க டின்னில் பிஸ்கட் வாங்கி போட்டு வைத்திருக்கிறேன்" என்றாள்.

எனக்கு மிருகங்களிடம் ஒரு தனிப்பட்ட அன்பு இருந்ததால், அவள் சொல்வதை நன்றாய் புரிந்து கொண்டேன்.

"பூனைக்குட்டி பெயர் என்ன கண்ணம்மா?" என்று கேட்டேன்.

"சம்பத்" என்றாள்.

"நல்ல பெயர்தான்" என்றேன்.

கண்ணம்மா எங்கு சென்றாலும் "மியா" மியா" என்று அவள் பின் ஓடினது சம்பத். அவள் வீட்டின் வளாகத்தைப் பெருக்கும் போது சம்பத் அவள் முதுகின் மேல் உட்கார்ந்து சந்தோஷமாக சவாரி போகும். கண்ணம்மா வெளியே போகும்போது தோளின் மேல் உட்கார்ந்து அவள் தலையைப் பிடித்துக்கொண்டு செல்லும். குரங்கு ஒன்று தான் அப்படிப் போவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இங்கே பூனைக் குட்டி அப்படிப் போகிறது. வேலை இல்லாத நேரமெல்லாம் கண்ணம்மா சம்பத்தோடு பேசிக் கொண்டே இருப்பாள். நானும் பார்த்து ரசிப்பேன். "சம்பத்" என்றால் ஆஸ்திதானே, ஆம், அது கண்ணம்மாவின் ஆஸ்தியாகிவிட்டது. அவள் அதைப் பிள்ளை போல் கவனித்தாள்.

சம்பத் எங்கள் வீட்டிற்கும் வந்து போய் இருந்தது. என் பூனைகள், மற்ற பூனை எல்லாவற்றையும் சண்டை போட்டு துரத்தினாலும் சம்பத்தை நம் அண்டை வீட்டான் ஆச்சே என்று ஒன்றும் செய்வதில்லை. சம்பத்திற்கு எங்கள் வீட்டில் தான் மீன் போட்ட சாதம் கிடைக்கும்.

சம்பத் டீ கேட்டாலும் கண்ணம்மா அதற்கு பால்தான் நல்லது என்று பாலைக் கொடுக்கிறாள். நான் சற்று, யோசித்தேன். நாம் பாம்பை கேட்டாலும் ஆண்டவர் நமக்கு நல்லது எதுவென அறிந்து மீனைக் கொடுக்கிறார் (மத். 7:11). கண்ணம்மா சம்பத்தை சுமப்பது போல் நம் கால் கல்லில் இடறாதபடி நம்மைக் காத்து, சம்பத் தோளில் செல்வது போல், காணமற் போன ஆடுகளாகிய நம்மை அவர் தேடி வந்து தோளில் ஏற்றிச் (லூக். 15:4) செல்லுகிறார். இதுதானே அவரின் கிருபை, கிருபையின் ஐசுவரியம். பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் எல்லாம் அவளைக் கைவிட்டுச் செல்ல, இந்தப் பூனை சம்பத்தை புத்திர சுவிகாரமாக்கிவிட்டாள். காட்டொலிவ மரத்தின் கிளையாக இருந்த நாம் ஒட்டவைக்கப்படவில்லையா? இந்தவிதம் தானே.

ஸ்பெர்ஜன் என்னும் பக்தன் கர்த்தரின் கிருபையை பற்றிச் சொல்லும்போது, ஒருநாள் அவர் அதிகக் களைப்பாக

வந்தாராம். "ஆண்டவரே" என்றார். கர்த்தர் "என் கிருபை உனக்குப் போதும்" என்றார். மீண்டும் ஸ்பெர்ஜன் நடந்தார் தேம்ஸ் நதியில் ஒரு மீன் தண்ணீரை குடித்துக்கொண்டிருந்தது அதைக் கண்ட அவர், "இந்த ஆற்றில் எவ்வளவு தண்ணீர் புரண்டு ஓடுகிறது, நீ எவ்வளவு குடித்தாலும் நதி வற்றாதே அதே போல்தான் கர்த்தரின் கிருபை வற்றாது என நினைத்தார்.

யோசேப்பு சேர்த்து வைத்திருந்த தானிய களஞ்சியத்தில் ஒரு சிறு எலிக் குட்டியை நினைத்தார். அது யோசேப்பை பார்த்து பயந்தது, கீழே சிதறிக்கிடந்த கோதுமையை சாப்பிட்டுக் கொண்டிருந்த அது நடுங்கினது. "இல்லை எலிக்குட்டியே உனக்குப் போதுமான தானியம் கிடக்கிறது" என்றான் யோசேப்பு. அதுபோல் கர்த்தரின் கிருபை நிறைந்து கிடக்கிறது என்று எண்ணினார். மலை ஏறும் ஒருவனைக் கண்டார், "ஆம் சகோதரனே ஆகாயத்தில் உனக்குப் போதுமான பிராணவாயு இருக்கிறது" என்றார். ஆம் அவர் கிருபை நம்மை சுற்றியுள்ளது, சூழ்ந்திருக்கிறது.

சம்பத் பூனைக்குட்டி கண்ணம்மாவிற்கு கொஞ்சமும் பயப்படுவதில்லை. சுவிகாரபுத்திரன் ஆச்சே! "அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். கர்த்தர் நம்மையெல்லாம் அவரின் 'சம்பத்' என்று தானே கருதுகிறார்.

"என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின்

⑦ நிறமாற்றம்!

"பூபாலா" என்று நான் கூப்பிட்டால் முகத்தில் புன்னகை தவழ தன் பிஞ்சுக்கரத்தை தூக்கி "டாடா" "டாடா" என்று சொல்லி ஆட்டுவான்.

எங்கள் பக்கத்து வீட்டை 'பிளாட்டை' கட்டக் கொடுத்து விட்டு, வீட்டுக்கு சொந்தக்காரர்கள் வேறுவீடு சென்று விட்டனர். கட்டிடம் மடமடவென்று எழும்ப ஆரம்பித்தது. வீட்டிற்கு காவல்காரன் முதலில் போடப்பட்டான். கட்டிடத்திற்குரிய பொருட்கள் வந்து குவிந்தன. காவல்காரன் குடும்பம் அங்கேயே தங்க ஆரம்பித்தது. அவனும் அவன் மனைவியும், குழந்தை பூபாலனும், அவன் தாயும் கூட இருந்தனர். மண்மேட்டில் தட்டியினால் முதலில் அவர்களுக்கு ஒரு வீடு கட்டப்பட்டது 'பூபாலனுக்கு ஒன்றரை வயதிருக்கும். தெரு தான் அவன் விளையாட்டு மைதானம். இக்காலத்தில் கட்டிடம் கட்டுபவர் அனைவருக்குமே தெருக்கள், ரஸ்தாக்கள் அவர்கள் சொந்த சொத்தாக இருக்க, இந்த சின்னக்குழந்தைக்கு மட்டும் அது விதிவிலக்காக இருக்க முடியுமா இந்த சுதந்தர இந்தியாவில்? இல்லை! பெரியவர்கள்தான் கல்லையும், மண்ணெய்யும், செங்கலையும், நீரையும் தெருவில் அங்கு மிங்கும் தாண்டித் திணறிச் செல்வோம், ஆனால் பூபாலன் புகுந்து விளையாடுவான்.

நான் வீட்டைவிட்டு வெளியே வரும் போதெல்லாம் பூபாலனைப் பார்ப்பேன். அவனிடம் அனுதினமும் கண்ட ஒரு வேடிக்கையான காரியம் என்னையே சிந்திக்க வைத்தது. இரவும், பகலும் அந்தக் கட்டிட வேலைகளின் மத்தியிலேயே ஓடி ஆடித் திரியும் பூபாலன், கட்டிடத்தில் என்ன வேலை நடக்கிறதோ அந்த நிறத்தில் தான் அவன் இருப்பான்.

செங்கல் வேலை நடக்கும்போது அடுக்கியிருக்கும் செங்களின் மத்தியில் திரிவதால் அவன் செந்நிறமாக இருப்பான். தலை முடி கூட சிவப்பாக காட்சியளிக்கும். சிமெண்ட் வேலை நடக்கும் போது அவன் உடலெல்லாம் சிமெண்டாசி அவன்

சிமெண்ட நிறத்திலிருப்பான். கருங்கல் ஜல்லியெல்லாம் கலக்கும் போது பூபாலன் கருப்பாக இருப்பான். மரவேலை, சுண்ணாம்பு அடிக்கும் போது வெள்ளையாகவும் இருப்பான்.

கிறிஸ்மஸ் அன்று அவனுக்கு ஒரு சட்டையும் சொக்காவும் வாங்கிக் கொடுத்தேன். அதை புதிதாக அணிந்தவுடன் அவ னுக்கு அதன்மேல் அதிக விருப்பம். அதைக் கழற்றவே விடாமல் சில தினங்கள் பலவர்ணத்தில் இருந்தான். அது கிறிஸ்மஸ் நிறம்! பூபாலன் சுற்றுப்புற சூழ்நிலையைப் பொறுத்து நிறம் மாறி னான்.

நாம் நிறம் மாறுவதை ஓணானில் காணலாம் அது மரத்தில் ஏறும்போது மரத்தின் பட்டை நிறத்தில் இருக்கும். இலைகள் மத்தியிலிருக்கும் பச்சையாக இருக்கும். அது தற்பாது காப்பிற்காக ஆனது. ஆனால் நாம் தன்மையில் அடிக்கடி மாறு பவரை "என்ன பச்சை ஓந்திபோல் மாறுறீங்க" என்போம்.

அமெரிக்காவில் பனிக் காலம் வரும்முன் மரத்தின் இலைகள் எல்லாம் பலவ...ணங்களில் மாறுகின்றன. ஒரே மரத்தில் பலநிறங்களான இலைகளையும் காணலாம். பார்ப்பதற்கு ரொம்ப அழகாக இருக்கும். காடுகள் கண்ணைப் பறிக்கும். மக்கள் பட்டணங்களைவிட்டு வெளியே இதைக் காண்பதற்காக *"colour Four"* என்று திரள் திரளாக போகிறார்கள். பட்டணங்கள் உள் மரங்கள் குறைவு. ஆனால் அவையும் நிறம் மாறி விடும். அடுத்த மாதத்தில் இலையெல்லாம் கொட்டி மொட் டையாக குச்சு குச்சாக நிற்கும். பின் எல்லாம் பனியால் *(Snow)* வால் மூடப்பட்டுவிடும். தூய வெள்ளையாக இருக்கும். இது காலத்திற்கு ஏற்ற கோலம்.

"பைக்" என்னும் மீன் தங்கள் நிறத்தை மாற்றுகின்றன. அது சூரியவெளிச்சத்தினால் கண்கள் மூலமாக நடைபெறுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். சூரிய ஒளி அதின் நரம்புகளை தூண்டிவிட்டு, அது அதின் மூளைவரைப் போய் தோலுக்கு அனுப்பப்பட்டு நிறத்தை மாறச் செய்கிறது. அது பொதுவாக மஞ்சள் நிறத்தில் உள்ளது. அது சூழ்நிலைக்கு ஏற்ப கருப்பாக மாறிவிடுகிறதாம். என்ன ஆச்சரியம்!

நாம் மாணிடரில் அநேகர் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுவதைக் காணலாம். குடும்பங்களிலும், அரசியலிலும், அலுவலகங்களிலும், திருச்சபையிலும் இந்த மாற்றத்தை நாம் காணலாம். உலகத்தோடு ஒத்துச் செல்ல வேண்டும் என்கிறார் பலர். அரசாங்கத்தில் பணிபுரியும் ஒரு கிறிஸ்தவ அதிகாரி லஞ்சம் வாங்குவது கண்டு அவரிடம் வந்தவர், "ஐயா நான் லஞ்சம் வாங்குவதுமில்லை, கொடுப்பதுமில்லை என்றாராம்.... அதற்கு அந்த கிறிஸ்தவர், லஞ்சம் நீங்கள் வாங்கமால் இருப்பதுபற்றி நீங்கள் தீர்மானிக்கலாம் ஆனால் நீங்கள் கொடுப்பது பற்றி நான் அல்லவா தீர்மானிக்க வேண்டும்" என்றாராம். எப்படி?

பைக் மீனின் நிறமாற்றம் அது கண்ணின் மூலமாக ஏற்படுவதுபோல கண்ணில் காணும் சினிமா, தொலைக்காட்சி முதலியவற்றால் மக்களின் நடை, உடை, பாவனை, பேச்சு, தன்மை எல்லாமே மாறிவிடுகிறது. ஆடை அலங்காரத்திலும், முடிச்சீர்திருத்தத்திலும் எப்படிப்பட்ட மாற்றம். ஆட்டம் பாடல் தான் என்ன! சிறு பையன் ஒருவன் தொலைக்காட்சியில் குதிப்பது போல் குதித்து சமீபத்தில் மரித்துவிடவில்லையா? ஆணும் பெண்ணும் வித்தியாசமில்லாத ஆடை அணிகிறார்களே. உபாகமம் 22:5 யை அறியார்களா?

பூபாலன் சிறுவன் சுற்றுப்புற சூழ்நிலைக்கு தக்க தோற்றத்தில் மாறினான். ஆனால் எல்லாம் அறிந்த பெரியவரும் மாறுகிறார்களே, மாற்றிக்கொள்கிறார்களே. உலகத்தோடு ஒத்துப் போவதற்காக.

நம் வாழ்க்கையில் கர்த்தர் எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தார். பக்தன் ஒருவர் எழுதுகிறார். "பாவம் கொண்டு வந்த பயங்கரமான மாற்றத்திற்கு கிறிஸ்துவின் இரத்தம் ஆசீர்வாதமான மாற்றத்தைக் கொண்டு வந்தது" உணர்கின்றோமா?

"நீ உன் வழியை மாற்றி மாற்றி இவ்வளவாய் விலகிப் போகிறது என்ன?" என்று கர்த்தர் கேட்கிறார்

நாம் என்ன சொல்வோம்? (எரே. 2:36).

⑧ மரித்தும் பேசுகிறார்!

"போஸ்ட்" என்ற சத்தம் வரவே ஓடினேன் முன்பக்கம் "திருமண அழைப்பு" ஒன்றை தபால்காரர் கொடுத்தார். யாரு டையதாக இருக்கும்? என்று எண்ணிக் கொண்டே விரைவா கப் பிரித்தேன் வாசித்தேன். என் கணவரிடம் சென்றேன்.

அஸீஸ் உடைய தம்பி அபுபக்கர் மகள் நூர்ஜஹானுக்கு கலியாணமாம். அஸீஸ் கார்டும் அனுப்பி, நம்மை வரும்படி கடிதமும் எழுதி இருக்கிறார். என் அண்ணன் கூட வருகிறா களாம் நம்மலும் போலாமா?

"நீ வேண்டுமானால் போ.... எனக்கு அடுத்த வாரம் வெல்லூர் போகனும். இங்கிருந்து நர்கீஸ் வீட்டார், மீரா வீட் டார் எல்லாம் போவார்கள்"

அஸீஸ் எங்கள் குடும்ப நண்பர். மதுரையில் கல்லூரியில் அண்ணன் கூட படித்தவர். பின் இங்கு என் கணவருக்கும் நண்பராகிவிட்டார்.

மதராஸிலிருந்து கீழ்க்கரைக்கு ஒரு பெரிய கூட்டமாகச் சென்றோம். அஸீஸ் இராமனாதபுரத்தில் வண்டி கொண்டு வந்து சந்தித்து கீழ்க்கரை அழைத்துச் சென்றார். என் அண்ண னும் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து அங்கு வந்திருந்தார்.

ஒரு முஸ்லீம் திருமணம் எத்தனையோ விதத்தில் எனக்குப் புதிதாகத் தெரிந்தது. அஸீஸ் எங்களைக் கூட்டிக் கொண்டு போய் எல்லாம் காட்டினார். சமைக்கும் இடத்திற்கும் கூட்டிச் சென்றார். அன்று இடியாப்பத்தில் பிரியாணி வெளியே வீடுக ளில் 'ஆர்டர்' கொடுத்து ஆயிரம் ஆயிரம் இடியாப்பங்கள் வாங்கி கறியை மசாலையெல்லாம் போட்டு தாழித்துக் கொட்டி பின் தேங்காய் பால் ஊற்றி கொஞ்சம் கொதி வந்த வுடன் இடியாப்பத்தைப் போட்டு பின் தம்....ஆ ...ஆ .பிரமா தம் (வாசம் வருகிறதா?)

அடுத்த நாள் குடும்பத்தினர் அனைவரும் நிறைய நல்ல பிரியாணி நிறைந்த தாம்பாள தட்டைச் சுற்றி அமர்ந்து (விட்டம் நான்கு அடி இருக்கும்) அனைவரும் ஒரே தட்டில் சாப்பிடுவது குடும்பத்தின் ஒற்றுமையை வெளிக்காட்டுவதாக இருந்தது.

சாப்பிட்டு முடிந்தபின் அஸீஸ் "ஜேஸ்மின் வருகிறீர்களா மசூதிக்குப் போகிறோம்" என்றார். திருமணத்திற்கு அடுத்தநாள் நான் புறப்படுவதாக இருந்ததால், கீழ்க்கரையில் ஒரே மாதிரி யான முஸ்லீம் வீடுகள் தவிர ஒன்றும் பார்க்காததால் "சரி" என்றேன்.

மசூதி வந்தது. காரைவிட்டு இறங்கும் போது "இது ஒரு சரித்திர சம்பந்தமான முக்கிய இடம்" என்றார் அஸீஸ்

"என்ன முக்கியம்?" என்றேன்.

"இந்த மசூதிவிளாகத்தில் சீதக்காதியின் கல்லறை இருக்கிறது" என்றார்

அப்படியா? என்றேன் ஆச்சரியமாக! எல்லாம் இறங்கி தலையில் துணி போட்டுக் கொண்டு மசூதி சென்றனர். நான் மட்டும் கல்லறைக்குச் சென்றேன். அருகில் போய் அமைதி யாக நின்றேன். ஆண்டுகள் முன் நான் எஸ். எஸ். எல். சி படிக்கும் போது எங்களுக்கு தமிழில் வந்த பாடம் ஒன்று "செத் தும் கொடுத்தான் சீதக்காதி" சீதக்காழி ஒரு வள்ளல். புலவர்க ளுக்கெல்லாம் அள்ளிக் கொடுக்கும் கொடைவள்ளல். அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டபின் ஒரு ஏழைப் புலவர், முன் அவர் உதவிபெற்றவர், சீதக்காதியின் கல்லறையண்டை நின்று அழுதாராம். அவர் கதறி அழ சீதக்காதியின் கை மோதிரத்து டனே கல்லறையின் உள்ளே இருந்து வெளியே புலவரிடம், மோதிரத்தை எடுத்துக்கொள்ளும்படி நீட்டப்பட்டதாம். இது வரலாற்றுக் கதை. நான் இதை சிந்தித்துக்கொண்டு நிற்கும் போது மசூதியிலிருந்து அவர்கள் வெளியே வரவே நானும் சென்று வீடு திரும்பினோம்.

மதராஸ் வந்தபின் அந்தக் கல்லறையை நினைத்தே என் மனதில் சிந்தனை பல தோன்றி மறைந்தன. சில ஆண் கள் முன் நானும் என் கணவரும், அமெரிக்காவில், நியூஜெர் மாகாணத்திலுள்ள அபெர்டினுக்கு, என் கணவரின் அக் மகன் வீட்டிற்கு சென்றோம். அவர் எங்களை அருகிலுள் ஒரு முக்கியமான ஆலயத்திற்கு அதின் சரித்திரத்தைக் கா செல்லும்போது சொல்லிக்கொண்டே அழைத்துச் சென்றா அமெரிக்காவின் புரட்சிகாலத்தில் பீரங்கியால் தாக்கப்பட் சிப்பாய்கள் பலர் ஆலயத்தின் உள்ளேயே மரித்தனர். பின் இந் ஆலயம் மருத்துவமனையாகவும் இருந்திருக்கிறது.

அந்த ஆலயத்தில் பதினேழாம் நூற்றாண்டில் வில்லிய டெனண்ட் என்பவர் ஆயராக சிறப்பாக பணியாற்றி இரு திருக்கிறார். மக்கள் மனதைக் கவர்ந்தவர். ஆனால் தீடிரெ ஒருநாள் மரித்தார். மக்கள் துயரத்தில் ஆழ்ந்தனர். அவரை சவ பெட்டியில் வைத்து பீடத்திற்குமுன் வைத்து மக்கள் எல்லா வந்து பார்த்துப்பின் பாடல்கள் பாடிக்கொண்டு இருந்தன திடீரென பாட்டு நிறுத்தப்பட்டது. மக்களால் தங்கள் கண் களையே நம்பமுடியவில்லை. மரித்த ஆயர் திடீரென எழுந் உட்கார்ந்தார். ஜனங்கள் கண்களை விரித்துப் பார்த்தனர். சிறி நேரம் அவராலும் பேச முடியவில்லை. பின் தான் கண் காட்சியை கண்ணீரோடு கூறினார். மீண்டும் அதே ஆலய தில் பதினேழு ஆண்டுகள் ஊழியம் செய்து கி. பி. 1777 ஆ ஆண்டு, மார்ச் மாதம் எட்டாம் தேதி மரித்தார். இன்றும் அவ பெயரிலே (டெனண்ட் சர்ச்) அந்த ஆலயம் உள்ளது.

இந்த சரித்திரத்தை கேட்ட பின் கேட்க வேண்டுமா என கிருந்த ஆவலை. ஆராதனை முடிந்தது. பலரை சந்தித்தே பல கேள்விகள் கேட்டேன். படங்கள், ஆலயம் பற்றிய செ திகள், ஆயர் டெனண்ட் பற்றிய குறிப்புகள் எல்லாம் வாங் னேன். ஆலயத்தில் அவரை முதல் முறை மரித்து வைக்கப்பட் இடத்தைப் போய் பார்த்தேன். தற்சமயம் அவர் கல்லை ஆலயத்தின் உள் இருப்பதைப் பார்த்தேன். வெளிே

..ளாகத்தில் அநேக சிப்பாய்களின் கல்லறைகளை எல் லாம் பார்த்து சுற்றிவந்தேன். காரில் ஏறி பின் சற்று வளைவில் இறங்கும் போது அந்த தூய-வெண்ணிற ஆலயம் எவ்வள ..ாக என் மனதைக் கவர்ந்தது என்று உணர்ந்தேன்.

தேவனுக்கு ஸ்தோத்திரம் நம் கர்த்தராகிய இயேசுவிற்கு ..ட்டும் கல்லறை கிடையாது. சிதக்காதி செத்தும் கொடுத்தான் என்ற வரலாறு இருந்தா லும் அவரின் கல்லறை கீழ்க்கரையில் உள்ளது. ஆயர் திரு டெனண்ட் மரித்து பின் உயிர் பெற்றா லும்' அவரின் கல்லறையும் ஆபர்டி னில் உள்ளது. பெரிய பெரிய தலைவர்களின் கல்லறைகளையும் அங்கே அவர்களுக்கு அஞ் ..லி செய்யப்படுவதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் இயேசு ..வோ என்றும் ஜீவனுள்ள கர்த்தராய் இருக்கிறார். அநேகருக்கு ..த்திய ஜீவன் அளிக்கிறார். அல்லே லூயா!

மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். (வெளி. 1:18).

⑨ கா...கா...கா

எங்கள் வீட்டின் முன் கதவைப் பூட்டி விட்டு அவ
மாக, வெளியே போகப் புறப்பட்டவளாக வளாகத்தின் கத
மாட்டிக்கொண்டே நின்றேன்.

"போம்மா, உள்ளே போம்மா, ஒன்றும் அப்படி அவ
மில்லை, முதலில் வீட்டுக்குள் போம்மா" என்றார்.

நான் யார் அப்படிச் சொல்லுவது என்று பார்த்தே
எதிர் வீட்டுக்காரர், ஒரு வயதான பெரியவர், அவர் வீ
வாசலில் நின்றார். எனக்கு அவரிடம் தர்க்கம் பண்
விருப்பமில்லாமல், அவருக்கு மரியாதை கொடுக்க, பி
அவரிடம் விளக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தவளா
அவர் சொற்படி உள்ளே திரும்பினேன். அவர் அப்ப
சொன்னதற்குக் காரணம், நான் வெளிக் கதவை மாட்டு
தருணம் ஒரு காகம் வந்து என் தலையில் நன்றாய் அடித்து
சென்றது. எனக்கு அதில் ஒன்றுமில்லை, ஆனால் அவருக்கு

காக்காவைப் பற்றி நாமெல்லாம் அறிவோம். ஆனா
மற்ற மதத்தினர் அதற்கு ஒரு முக்கியமான இடம் கொடு
கிறார்கள். நான் அதைப்பற்றி அதிகம் விசாரித்து அறிந்தே
முக்கியமாக இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் எந்
விசேஷத்திலும், சிலர் அனுதினமும், அதைக் கூவி அழைத்
உருண்டை உருண்டையாக சாதம் வைக்கிறார்கள். ஏ
மரித்தவரின் ஆவிக்கும் அதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்ப
அவர்கள் நம்பிக்கை. அதுவுமல்லாமல் ஏழு தலைமுறைக்
விசேஷ காலங்களில் பெற்றோரின் ஆவி காகத்தின் ரூபத்தி
வருமென்று கூறுகிறார்கள்.

மரித்த ஒருவருக்குச் செய்யும் இறுதிச் சடங்கில், குருக்க
மந்திரம் ஓதி, பின் சாப்பிட்டுக் கை அலம்பும் முன், காகத்துக்

சாதம் வைத்து "கா,கா" வென்று கூப்பிடுகிறார்கள். காகம
வந்து சாப்பிடவில்லையென்றால், அந்த ஆத்துமா சாந்தி அடை
யவில்லை என்று எண்ணுகிறார்கள். ஒரு தாய் அல்லது தந்தை
இறந்தபின், அவருக்காக நடத்தப்படும் காரியத்தில், மகன்
காகத்திற்கு சாதம் வைத்துக் கூப்பிட்டும், காகம் வரவில்லை
யென்றால், மகனுக்கு அவர்மேல் அன்பு இல்லையென்று,
அவரிடம் அன்பு கொண்ட வேறு ஒருவரை மீண்டும் சாதம்
வைக்கும்படி செய்வார்களாம். மேலும் சிலர் மரித்தவரின்
ஆத்துமா பதினாறு தினங்களில் எங்கு போகவேண்டுமெனத்
தீர்மானிக்கப்படுவதால் அதுவரை தினம் காகத்திற்கு சாதம்
வைக்கிறோம் என்கிறார்கள். சனிஸ்வரன் என்ற அவர்கள்
தெய்வத்திற்கும் காகத்திற்கும் சம்பந்தம் உண்டு என்கிறார் சிலர்.

எனக்குப் பறவைகள் எல்லாம் அதிக விருப்பம். இன்றும்
இரண்டு காகங்கள் என் கையிலேயே சாப்பிடுகின்றன. அந்த
மணிப்படி அவைகள் வந்து வீட்டின் முன்னால் உட்கார்ந்து,
தங்கள் வரவைத் தெரிவிக்க "கா கா" என்று அவைகள்
கூப்பிடுகின்றன. நான் அவைகளைக் கூப்பிடத் தேவை
யில்லை. நான் உள்ளே இருக்கின்றேனா என்பதைப் பார்க்க
தலையைச் சாய்த்து குனிந்து பார்க்கின்றன. நான் வரவில்லை
யென்றால் முன் வாசற்படியில் வந்து கூப்பிடுகின்றன. அக்கம்
பக்கம் உள்ளவர் கூட ஆச்சரியப்படுகின்றனர்.

காகம் உணவு கலந்து உண்ணக் காணீர் என்பது நாம்
அறிந்தது. இரையைக் கண்டால் அனைத்துக் காகங்களையும்
சத்தம் கொடுத்து அழைக்கும். அதற்குத் தன்னயம் கிடையாது.
ஆனால் மனிதரோடு பழகும்போது அதற்கு புத்தி மாறிவிடு
கிறது. என் கையில் சாதம் சாப்பிடும் தருணம் மற்ற காகங்கள்
வந்தால், அது அவற்றை கொத்தி விரட்டுகிறது.

காகம் ஒரு ஏமாளி. குயில் குஞ்சுகளைத் தன் கூண்டில்
வைத்து வளர்க்கிறது. குயில் குஞ்சுகள், காகம் குஞ்சுகளை
எல்லாம் தள்ளிவிட்டு அதிகம் சாப்பிடுமாம். இதைப்பற்றி
பலவர் எழுதும் சமயம், சபைகளில் இனம் கண்டுபிடிக்க

முடியாத பொய் விசுவாசிகள் இருப்பார்கள். முதலிடம் பெ
வார்கள், உண்மை ஊழியர்களைத் தள்ளிவிடுவார்கள். அ
கள்தான் "குயில் விசுவாசிகள்", அவர்கள் நன்றாய் வளர்
வுடன் வெளியே கிளம்பிவிடுவார்கள் என்கிறார். எப்படி

ஆண்டவர் கட்டளையிட காகம் அப்பத்தை
இறைச்சியையும் எலியா தீர்க்கனுக்கு கொண்டுபோக
லையா? (1இரா. 17:6). அது இயற்கைக்கே முரண்பட்ட
காகம், அதுவும் இறைச்சியைத் தன் அலகில் கொண்டுபே
மற்றவருக்குக் கொடுக்கிறது.

என்ன ஆச்சரியம், கர்த்தரின் கட்டளை!

காகத்தின் கீழ்படிதல்!

நாம் ஒரு காகம் வந்து கூப்பிட்டால் விருந்தினர்
வருகிறார்கள் என்று சொல்லுகிறோம். அதேபோல் அ
காகங்கள் கத்தினால் ஏதோ ஆபத்து வருகிறது என்றும் செ
லுகிறார்கள். பிரசங்கி "செட்டைகள் உள்ளது அந்
செய்தியை அறிவிக்கும்" (பிர. 10:20) என்று கூறுகிறதல்ல

இந்த மாதம் காகத்தைப்பற்றி எழுதவேண்டுமெ
நான் தீர்மானித்திருக்கையில், ஜுலை 31-ம் தேதி *The Hindu S*
ence & Technology செய்தித்தாளில் காகங்களைப்பற்றி ஒருபெ
பாதிப்பக்கக் கட்டுரை வந்திருந்தது. அதைக் கண்டே
வாசித்தேன். அதில் காகங்களைப்பற்றி பெரிய ஆராய்
செய்து, எழுதி இருக்கிறார்கள். காகங்களுக்கும் மனிதருக்
அநேக ஒற்றுமைகள் உண்டு எனக் கண்டுபிடித்திருக்கிற
கள். டாக்டர் டோனால்ட்டும், டாக்டர் கால்ப்ரே என்பவ
மரங்களில் ஏறி இரவு தங்கி இருந்தும், சில காகங்களு
அடையாளம் போட்டும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்
காகங்களுக்கு குடும்பப்பற்று அதிகம் உள்ளதென்றும், கா
வளர்ந்து பெரிதாகி கூட்டைவிட்டுப் போன பின்னும், தங்
பெற்றோரிடம் வந்து போய், அவர்கள் அருகிலேயே கூ
கள் கட்டுகின்றன என்றும் அடுத்து வரும் தன் த

குஞ்சுகளுக்கு அவைகள் இரை கொண்டுவந்து ஊட்டிவிட்டு பெற்றோருக்கு உதவி செய்கிறதென்றும் கூறுகிறார்கள்.

"காக்காக் கூட்டம்" என்கிறார்களே, அதுதான் இதுவோ? பெற்றோர்களிடமும், உடன்பிறப்புடனும் அன்பற்ற மானிடர், காகங்களிடமிருந்து படிக்கவேண்டிய பாடமிருக்கிறதே.

டாக்டர் சிட்னி என்பவர் காகங்கள் கொடுக்கும் சத்தம் ஒவ்வொன்றும் வெவ்வேறு அர்த்தம் என்று கண்டு விளக்கி இருக்கிறார். காலை நான்கு மணிக்கு, வரும் புது நாளை வர வேற்க அவைகள் போடும் சத்தமும் அப்படித்தானோ? என்ன பரபரப்பு! நாம் அந்த நாளுக்காக கர்த்தரைத் துதித்து அதி காலையில் ஆரவாரிக்கின்றோமா?

இந்த வாரம் பார்த்து என் சகோதரி திருமதி பொன்னையா "ஜெஸ்மின்" என்று கூப்பிட்டார்கள்.

"என்ன அக்கா" என்றேன்.

எங்கள் வீட்டில் முன் பக்கம் கொஞ்சம் தண்ணீர் கொட்டும் இடத்தில் ஒரு காக்கா தன் அலகில் எதையோ கொண்டு வந்து, மூன்று முறை தண்ணீரில் நன்றாய் அலசி எடுத்து பின் அதை சாப்பிட்டது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நீ பார்த்தால் இதை வைத்து ஒரு கதை எழுதிவிடுவாயே என்று நினைத்தேன்" என்றார்கள்.

காகத்திலும் சுத்தம் பார்க்கும் காகம் இருக்கிறதா? நான் அவை எதிலும் வாய் வைக்குமென்று அவைகளுக்கு சாதம் கொடுத்த பின் கையை சோப் போட்டு கழுவுவேன்.

"காக்கா பிடித்தல்" என்ற சொல்லமைப்பு எப்படி வந்தது என்று பக்கத்து வீட்டு திரு. வெங்கடகிருஷ்ணன் அண்ண னிடம் கேட்டேன். அவர் நல்ல விளக்கம் தந்தார். "காக்காவால் நமக்கு எந்த பயனும் கிடையாது. அவை வீட்டுச் சுவர்களையும் வளாகத்தையும், கார் முதலியவற்றையும் அழுக்காக்கும். ஆனால் காரியத்திற்கு அதை நயந்து சாப்பிடக் கூப்பிட்டு சாதம்

கொடுக்கிறோம். பின்னால் அதை சட்டை செய்ய மாட்டோம் என்றார். ஆம், மானிடர் மத்தியில் இந்தப் பழக்கம் அதிக உண்டு. தங்கள் காரியம் ஆகும் வரை 'நைஸ்' பண்ணுவா "ஐஸ் வைப்பார்" காரியம் முடிந்த பின் தூக்கி எறிந்திடுவா உண்மைதானே?

அமெரிக்கா முன்னேறக் காரணம் என்ன என்றாரா ஒருவர். அடுத்தவர், "அங்கே காக்கா பிடிக்கும் பழக்கமில்லை என்றார். பாவம், காக்காவின் பெயர் இப்படி அடிபடுகிற என்று எண்ணினேன்.

காகத்தைப் பற்றி நாம் அற்பமாக எண்ணலாம். ஆனா அவற்றிற்கும் எவ்வளவு ஞானம் ஆண்டவர் கொடுத்திரு கிறார். குடும்பங்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாத காலத்தி காகங்கள் மத்தியில் அவ்வளவு ஒற்றுமை. அவைகள் சேர்ந் ஒன்றாய் விளையாடுமாம். அவைகளுக்கு பிரியமான விளை யாட்டு *Tug-of-war* ஆம். ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கி றனர். என்ன ஆச்சரியம்!

தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது (1 தீமோ. 4:4)

⑩ மாற்றுவார் அவர்

"அம்மா ......அம்மா"

"யாரு?"

நான்தானம்மா வண்ணாத்தி, அழுக்குத்துணி எடுத்துக்கிட்டுப்போக வந்தேன்.

"ஓ டோபியா சரி இரு வர்றேன்"

அம்மா படுக்கை அறைக்குள் எட்டிப்பார்க்கிறார்கள். குழந்தை நன்றாகத் தூங்குகின்றான். அவன் போட்டிருந்த கால் சட்டையை மெதுவாக உருவி எடுத்து வேறு அதே போல் உள்ள கால் சட்டையை மாட்டிவிடுகிறாாகள். குழந்தைக்கு தலைக்கு ஊற்றி, சாம்பிராணி போட்டு, சாதமும் ஊட்டி, தாலாட்டுப்பாடி தூங்க வைத்ததால் நிம்மதியாக அயர்ந்து தூங்கினான்.

"நல்ல வேளை எழுந்திருக்கவில்லை. இந்தக் கால் சட்டையை விடமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கின் றானே. இதை வெள்ளாயில் போட்டாத்தான் சுத்தமாகும்" என்று எண்ணிக்கொண்டு மற்ற துணிகளையும் எடுத்து முன் னால் வந்து வண்ணாத்திக்கு போட்டார்கள். கணக்கு எழுதிய பின் வண்ணாத்தியை அனுப்பிவிட்டு அம்மா உள்ளே சென்று குழந்தை தூங்கும்போது வேலையைக் கவனிக்கச் சென்றார்.

திடீரென குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது. சாப் பிட்ட கையை அலம்பிவிட்டு அம்மா ஓடினார். குழந்தை படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு "நா கோடு காச்சி", நாகோடு காச்சி" என்று அலறிக் கொண்டிருந்தான். அம்மா உள்ளே போய் என்ன சமாதானப்படுத்த முயன்றும்

"நா கோடு காச்சி" என்ற சத்தமும் அழுகையும் அதிகமானது. என்ன கொடுத்தாலும் தூக்கி எறியப்பட்டது. பையனுக்கு வயது ஒன்றரை. இன்னும் சரியாக பேச்சு வரவில்லை. மழலைச் சொற்கள்தான் பேசுவான். என்னுடைய கோடு போட்ட கால்சட்டை எங்கே என்பதுதான் அவன் கேள்வியும், அழுகைக்கு காரணமுமாகும்.

சற்று நேரத்தில், மூச்சுத்திணற கண் சொருக கத்தி அழுதான். அம்மாவிற்கு பயமாகிவிட்டது. கணவரோ, அலுவலகம் சென்றிருந்தார். வண்ணாத்தி வீடும் தெரியாது. போகவும் முடியாது. இருப்பதோ சொக்கிகுளம். அக்காலத்தில் இக்காலம் போல பேருந்து வசதியோ, ஆட்டோ ரிக்ஷாவோ கிடையாது. அம்மாவிற்கு திடீரென ஒரு எண்ணம் வந்தது. சிறுவனோ அழுகையை விட்டபாடில்லை. தாய் அழும் குழந்தையை தூக்கிக்கொண்டு வீட்டைப்பூட்டி விட்டு, கொஞ்சத்தூரம் நடந்து, ஒரு குதிரை வண்டியைப் பிடித்து, ரெயில் நிலையத்திற்கு எதிரே மங்கம்மா சத்திரத்திற்கு அடுத்த தெருவிற்கு கொஞ்சம் சீக்கிரமா போப்பா என்று சொல்லி பணம் பேசி வண்டி ஏறினார். மதுரையில் அக்காலத்தில் எங்கும் குதிரை வண்டி தான் போகும். பையன் அழுகை விட்டபாடில்லை. வண்டியிலும் துள்ளினான்.

"குழந்தைக்கு என்னம்மா? வயிற்று வலியா? ஏன் இப்படிக் கத்துது? மருத்துவரிடம் போறிங்களா? சும்மா கிரேப் வாட்டர் கொடும்மா. என்னத்தையோ கொடு, கொடுன்னு சொல்லுதே குழந்தை" என்றார் வண்டிக்காரர். அதற்குள் எதிரே ஒரு குதிரை வண்டி வரவே, "ஏய், ஏய், ஏய்" என்று குதிரையை சாட்டையால் அடித்து திருப்பிச் சென்றார்.

தாய் பதில் கூட சொல்லவில்லை. அவளின் எண்ணமெல்லாம் எப்படி அழுகையை நிறுத்துவது என்பதே. அதற்குள் இடமும் வந்தது. பணத்தை வண்டிக்காரனுக்கு கொடுத்து விட்டு விரைந்து இறங்கி ஓடி, "அக்கா, அக்கா, கனகக்கா" என்று கதவைத் தட்டினார்.

கதவை திறந்து கொண்டே அக்கா, "என்ன ஜீவமணி வா...வா என்ன திடீரென வந்திருக்கிற? ஏன் இவன் இப்படி அழுகிறான்?" என்றார்.

"அக்கா, அண்ணைக்கு ஒரு கோடு போட்ட கால்சட்டை தைத்து தம்பிக்கு கொடுத்திங்களே அது மாதிரி ஒன்று வேணுக்கா, அதை வண்ணாத்திக்குப் போட்டுவிட்டேன் என்று ஒரே அழுகை அழுகிறான் அக்கா"

"நீ அவனுக்கு ரொம்ப செல்லம் கொடுத்திட்ட ஒரே பிள்ளை, அதுவும் நாள் சென்று, சரி சரி முதலில் உட்காரு. அந்தத் துணியில் பாதி இருந்தது, எனக்கு நினைவிருக்குது சரி விரைவாக தைத்து தருகிறேன்" என்றார். அம்மா அழும் குழந்தையுடன் ஆர்வமாக உட்கார்ந்தார்கள். சிங்கர் மிஷன் கட....கட வென்று ஓடினது. சிறிது நேரத்தில் கோடு கால் சட்டையொன்று உருவானது, தயாரானது. அதைப் பெரியம்மா கொண்டு வந்து கொடுத்தவுடன் சிறுவன் அழுகை நின்றது. தன் பொக்கை வாயால் சிரித்துக் கொண்டு இருபல்லைக் காட்டிய வண்ணம் "நா கோடு காச்சி" என்றான்.

அந்தச் சிறுவன் பெரியவனான பின் கோடிக் கணக்கான கோடுகள் போட்ட துணிகள் தயாராக இருந்த மதுரை மில்லில் உதவி ஸ்பின்னிங் மாஸ்டராக பணியாற்றினார். அவர் வேறு யாருமில்லை என் சொந்த அண்ணன் டூவிப்சிங் தான். என் தாயார் இந்த நிகழ்ச்சியை சொல்லிச் சிரிப்பார்கள்.

நான் இந்தமாதம் என்ன கதை எழுதுவது என்று வாழ்க்கை சம்பவங்களை சிந்தித்தபோது இது என் மனதில் பளிச்சிட்டது. நாமும் உலகில் அநேக காரியங்களில் பிடிவாதமாகத்தானே இருக்கின்றோம். கால் சட்டைய்யை வண்ணானுக்குப் போட்டது அழுக்கு நீங்கி சுத்தமாவதற்குத்தானே. குழந்தைக்குப் புரியவில்லை. ஆனால் பெரியவர்களாகிய நமக்கு கர்த்தர் சில முறைகளைக் கையாளுவது நம்மை சுத்தப்படுத்துவதற்கு, நீதியின் வஸ்திரம் தரிக்க என்பது புரியவில்லையே. ஆபிகாரம் புரிந்து கொண்டார், யோபு புரிந்து கொண்டார்,

தாவீது அறிந்து கொண்டார். ஆனால் நாம்..நாம் முறுமுறுக்கின்றோமா?

ஒரு தாய் தன் சுகவீனமான குழந்தைக்காக அதிகமாக ஜெபித்தார். ஆனால் குழந்தை சுகமே பெறவில்லை. நாளுக்கு நாள் காய்ச்சல் அதிகமானது. பார்க்க வந்த பக்தர்கள் சிலர் ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து ஜெபிக்கும்படி ஆலோசனை சொன்னார்கள். தாய்க்கு விருப்பமில்லை. எப்படியும் என் குழந்தை சுகம் பெறவேண்டும் என்றார். அழுதார் துடித்தார். குழந்தையின் ஜுரம் கொஞ்சம் கொஞ்சமாக நின்றது. ஆனால்?.... ஆனால்? அவன் என்றும் புத்தி சரியில்லாத பையனாக வளர்ந்தான். அந்த அம்மா அந்தப் பையனால் பட்ட உபத்திரவம் சொல்லி முடியாது.

ஒரு அறையில் பெரியவனான பின் அவனை பல நேரங்களில் அடைத்து வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தாய்க்கு வயதானது. அவர் ஒருவர் தான் அவனைக் கவனிக்க முடியும். “தன் மரணத்திற்குப் பின் யார் பார்ப்பார்கள்?” யாராலும் முடியாதே என்று உணர்ந்தார்கள். “என் மரணத்திற்கு முன் இவனை எடுத்துக்கொள்ளும் ஆண்டவரே” என்று ஜெபிக்க நேரிட்டது. என்ன பரிதாபம்!

கர்த்தரின் சித்தத்திற்கு எதிர்த்து நின்றதை பிடிவாதமாய் நின்றதை நினைத்துக் கண்ணீர் வடித்தார்கள். சிறு குழந்தைகள் போல்தானே பெரியவர்களும் பிடிவாதமாய் பல காரியங்களில் இருக்கின்றோம். நம்மை மாற்றி அமைப்பார். நம்மேல் படிந்த மாசுகளை நீக்குவார்.

“நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன்” (சகரி. 3:4).

மனம் விட்டு உங்களோடே....!

இந்தப் புத்தகத்தின் மூலமாக உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

இந்தப் புத்தகத்தில் சகோதரி ஜெஸ்மின் பால்ராஜ் அவர்கள் தனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை வாழ்க்கை வரலாற்றை தொகுத்து கொடுத்திருக் கிறார்கள். இந்தப் புத்தகம் நிச்சயமாகவே உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தப் புத்தகத்தை வெளியிட நினைத்தபோது ஒரு அருமைக் குடும்பத்தினர் இதற்காக செலவாகும் தொகையை கொடுக்க முன் வந்தார்கள். அவர் களுடைய தியாகமான உதவியினால் இந்தப் புத்தகம் வெளியிடப்பட ஏதுவாயிற்று.

Mrs. Ramela JeyaPaul & Family

Narcross, U.S.A.

இந்தப் புத்தகத்தினால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் அவர்களையும் அவர்களுடைய அருமைக் குடும்பத்தினரையும் சேருவதாக! கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக!

இந்தப் புத்தகத்திற்கு ஒய்வு தர வேண்டாம். குறைந்தது ஐம்பது பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்.

எமது புதிய புத்தகங்கள்!

470. சிந்தனைக்கு சிறுகதைகள்!
(H.M. பாண்டியன்) 10.00

471. அந்த தியாகம் உனக்காக!
(தேவ ராஜூலு) 10.00

472. போற்றுவோம் புண்ணியரை! 10.00

473. நரகத்தைப் பற்றிய ஒரு தெய்வீக வெளிப்பாடு!
(காதரின் பாக்ஸ்டர்) 20.00

474. முத்துக்கள் முப்பது! 10.00

475. வேதத்திலிருந்து ஆழமான துணுக்குகள்! 10.00

476. ஏதேனில் ஆதிமணம்! (லதா ரமேஷ்) 10.00

477. சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில்!
(ராஜன்) 10.00

478. கோபக் கலசங்கள்! (டுணாமிஸ்) 10.00

479. சந்தோஷமாயிருங்கள்!
சந்தோஷமாயிருங்கள்! 10.00

480. எல்லா சூழ்நிலையிலும் மனமகிழ்ச்சியாய்
இருப்பது எப்படி? 10.00

481. நிரம்பிய களஞ்சியங்கள்! 10.00

482. ஓட்டமும், போராட்டமும்! 10.00

483. விசுவாச வீரர்களும்,
வீராங்கனைகளும்! 10.00

484. பூரண சமாதானம்,
தெய்வீக சமாதானம்! 10.00

485.	நூறு மடங்கு ஆசீர்வாதங்கள்!	10.00
486.	நம்மில் வாசம் பண்ணும் தேவன்!	10.00
487.	சமாதானம் வேண்டுமா?	10.00
488.	ஆயுதங்கள்! வல்லமையான ஆயுதங்கள்!	10.00
489.	விசுவாச வார்த்தைகளும், ஆசீர்வாதங்களும்!	10.00
490.	அன்பின் ஊற்றுகளும் அன்பின் ஆறுகளும்!	10.00
491.	ஆசையாய்த் தொடர்கிறேன்!	10.00
492.	அன்பிலே பூரணராவது எப்படி?	10.00
493.	நீங்கள் யார்? உங்கள் ஆண்டவர் யார்?	10.00
494.	அழைத்த அழைப்பிலே மேன்மையடைவது எப்படி?	10.00
495.	சர்வ வல்லமையுள்ள தேவன்!	10.00
496.	பூரண பரிசுத்தத்தை நோக்கி!	10.00
497.	மகிமையின் இராஜா!	10.00
498.	பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்!	10.00
499.	சிருஷ்டி கர்த்தர்!	10.00
500.	மேலாவாய்! தலையாவாய்!	10.00
701.	உண்மையும், உத்தமும்!	10.00
702.	பரிசுத்தத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்!	10.00
703.	நேர்த்தியான சுதந்திரங்கள்!	10.00
704.	உங்களை அழைக்கிறார்!	10.00
705.	திரும்பத் தருவார்!	10.00

706. ஆவியும் ஜீவனுமான கர்த்தருடைய வார்த்தை! 10.00

707. தளர விடாதேயுங்கள்! 10.00

708. விடுதலை ஆகும் வழி! 10.00

709. தழும்புகளால் குணமானோம்! 10.00

710. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி! 10.00

711. யுத்தம் கர்த்தருடையது! 10.00

712. ஞானத்தின் ஏழுத்தூண்கள்! 10.00

713. அழைத்தவர் உண்மையுள்ளவர்! 10.00

714. ஆச்சரியமான உண்மைக் கதைகள்! 10.00

715. மகிமையின் மேல் மகிமையும் மகிமையின் அபிஷேகமும்! 50.00

716. ஆவியின் கனிகளை அள்ளிக்கொடுப்பது எப்படி? 50.00

717. ஆவியின் கனியோ! 10.00

718 எபேசியர் நிருபத்திற்கு இனியதோர் விளக்கவுரை! 10.00

719 என்னால் முடியுமா? 10.00

⌘

புத்தகங்கள் கிடைக்கும் இடம்:

J. சாம் ஜெபத்துரை, M.A.,

[illegible] ரோடு,

கோடம்பாக்கம், சென்னை - 600 024.